பான் செக்கர்ஸ்

# மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகம் இணைவு பெற்றது)

மதுரை சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002

## இந்திய அரசியலமைப்பு விழிப்புணர்வு திட்டம் குறித்த அறிக்கை

28/02/2024 அன்று காலை 11.30 மணியளவில் எம் கல்லூரியில் **"இந்திய அரசியலமைப்பு விழிப்புணர்வு திட்டம்"** என்ற பெயரில் இந்திய அரசியலமமைப்பின் அம்சங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்து கருத்தரங்கு நடைபெற்றது. அனைத்து மாணவிகளும் பேராசிரியர் பெருமக்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மேலும், வாக்களிப்பதன் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. மாணவிகளுக்கு விழிப்புணர்வு கருத்துக்கள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டது.

1. 18 வயது நிறைந்த அனைவரும் வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து பெறவேண்டும் என்று ஊக்குவிக்கப்பட்டது.
2. 18 வயது நிறைந்த ஒவ்வொரு இந்திய குடிமகனும் தவறாமல் வாக்களிப்பது கடமை.
3. இந்திய அரசியலமைப்பின் பாதுகாவலராக விளங்கும் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் உறுதியாய் இருத்தல் வேண்டும்.
4. நாட்டில் அனைத்து மக்களையும் இனம், மதம், மொழி ஆகியவற்றின் மூலம் ஒன்றிணைக்கும் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தீவிரம் காட்ட வேண்டும்.
5. வாக்களிப்பவர் தமது வாக்கை விற்றல் கூடாது.
6. தமது குடும்பத்தினர் மற்றும் அருகில் இருப்பவர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும்.

5/3/24

கல்லூரி முதல்வர்